Golden Point Award 2023
Tamil Poetry – Third Prize
*காலச்சக்கரம்* by Thenmozhi Ashok அசோக்குமார் தேன்மொழி

**1) காலச்சக்கரம்**

பரந்த குடியிருப்பு வளாகங்களில்
ஆங்காங்கே உதிர்ந்து விழும் சருகுகளாய்
கூன் முதுகுக்காரர்களும்
தேகம் சுருங்கிய காரிகைகளும்.

எப்போதுமேயான நடைப்பயிற்சியில்
எதேச்சையாக இறப்பின் கூடத்தைக் கடக்கும்போது
உடல் நடந்தாலும்
உள்ளம் ஒரு அடிகூட வைக்காமல் தேம்பும்.

மனித வாசனையறிந்து
காலுக்குள் பாய்ந்தோடும் பூனை
வாடிய முகத்தோடு
தரையில் உடலை வளைத்துத்
தவமிருக்கும்.

தளத்தில் சாய்த்துப்போட்ட பெட்டிக்குள்ளிருக்கும்
பழக்கப்பட்ட முகத்திற்கு
கொஞ்சமும் பொருந்தாத
சாய்ந்து நிற்கும் இளமைக்காலப் புகைப்படம்
ஏதேதோ சொல்ல முற்படும்.
அது பேசும் மொழி புரியாது

Golden Point Award 2023
Tamil Poetry – Third Prize
*காலச்சக்கரம்* by Thenmozhi Ashok அசோக்குமார் தேன்மொழி

அந்தப் பழக்கப்பட்ட முதியவர்
இன்னும் என் மனதில்தான்
வாழ்கிறார் இறப்பை வென்று!

புறாக்களும் மைனாக்களும்
அவரைப் போன்றதொரு வள்ளலைத் தேடி
பசியில் சுருங்கிய வயிற்றைத்
தூக்கிக்கொண்டு அலைகின்றன!

சுருதி பிசகிய மெல்லிசையாய்
அழுகிறது அந்த 'மியாவ்'!